# 2019 உள்ளூர் தேர்தலுக்கு ஆள்சேர்ப்பு

**எங்கள் மன்றங்கள் மற்றும் சுகாதார வாரியங்களுக்கு யார் பிரதிநிதியாக வரவேண்டும் என நாங்கள் முடிவு செய்வதற்கு என அமைந்தவையே உள்ளூர் தேர்தல்கள் ஆகும். வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்ற எவருமே இந்த உள்ளூர் தேர்தல்களில் வாக்களிக்கலாம். இந்த தேர்தல்கள் இந்த வருடம் அக்டோபர் மாதத்தில் தபால் வாக்களிப்பாக நடத்தப்படும்.**

---

இந்த தேர்தல்கள் மாவட்ட மற்றும் மாநகர மன்றங்கள், பிராந்திய மன்றங்கள் மாவட்ட சுகாதார வாரியங்கள் ஆகியவற்றுக்காக நடைபெறும். நியூஸிலாந்தின் சில பாகங்களில், உள்ளூர் மற்றும் சமுதாய வாரியங்கள், உரிமம் வழங்கும் அறக்கட்டளைகள் மற்றும் சில நிறுவன அமைப்புக்களுக்காகவும் கூட தேர்தல்கள் நட்த்தப்படும்.

வாக்களிப்பதற்கு நீங்கள் பதிவு செய்து கொண்டு உள்ளூர் தேர்தல்களின்போது உங்கள் வாக்கினை அளிக்கவும் வேண்டும்.

நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர், நியூஸிலாந்தின் குடிமகன் அல்லது நிரந்தர இருப்பிடவாசி, அல்லது உங்கள் வாழ்நாளில் ஒரு இடத்தில் ஒரு வருடத்திற்கும் மேலாக குடியிருந்தவர் என்றால் நீங்கள் வாக்களிக்க பதிவு செய்து கொள்ளலாம்.

வாக்களிப்பதற்காக உரிய நேரத்தில் கூடுமானவரையிலான மக்கள் பதிவு செய்துகொள்வதை உறுதி செய்வதற்காக, ஜூன் மாதம் 29 ஆம் தேதியிலிருந்து பதிவு செய்வதற்கான ஒரு ஆவணத்தொகுப்பு தபால் மூலமாக தற்போது பட்டியலில் இருக்கும் ஒவ்வொருவருக்கும்  அவரவர்கள் புதுப்பிப்பு செய்து கொள்ள அனுப்பி வைக்கப்படும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் அனைத்து விவரங்களும் சரியாக இருக்கிறதா என்று சரிபார்ப்பது மட்டுமேயாகும்.

ஜூலை 8, திங்கட்கிழமைக்குள்ளாக உங்களுக்கான ஆவணத்தொகுப்பு வராவிட்டால், நீங்கள் வாக்களிப்பதற்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது உங்கள் விபரங்கள் புதுப்பிக்கப்படவில்லை என்று அர்த்தமாகும். பதிவு செய்வதற்கோ அல்லது உங்கள் விபரங்களைப் புதுப்பிக்கவோ நீங்கள் புதிய ஒரு ஆள் சேர்ப்பு படிவத்தை நிரப்ப வேண்டும். ஆன்லைனில் **vote.nz** என்ற வலைத்தளத்திற்கு செல்லவும் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணில் அழைத்து கேட்டுப்பெறவும்.

இந்த தேர்தல்கள் உள்ளூர் மன்றங்களினால் நடத்தப்படுகின்றன மற்றும் செப்டம்பர் மாத பின் பகுதியில், வாக்களிப்பதற்கான ஆவணங்களை வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் அனைத்து வாக்காளர்களுக்கும் தபாலில் அவர்கள் அனுப்பி வைப்பார்கள்.

**ஆகஸ்ட் 16, வெள்ளிக்கிழமைக்குள்ளாக நீங்கள் பதிவு செய்துகொள்ளவில்லை என்றால் தபாலில் அனுப்பவிருக்கும் வாக்குப்பதிவு ஆவணங்களை நீங்கள் பெறமாட்டீர்கள்.** இந்த தேதிக்குப் பிறகு நீங்கள் பதிவு செய்தால், உங்கள் உள்ளூர் தேர்தல் அதிகாரியிடமிருந்து சிறப்பு தேர்தல் ஆவணங்களை நீங்கள் வேண்டிப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.



வாக்களிப்பதற்காக பதிவு செய்து கொள்வது பற்றிய மேலும் தகவல்களுக்கு **vote.nz** எனும் வலைத்தளத்திற்கு செல்லவும்

உள்ளூர் தேர்தல்களில் வாக்களிப்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு **vote2019.co.nz** எனும் வலைத்தளத்திற்கு செல்லவும்

Local ELECTIONS